# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 337/மா/2025
நாள் 03.09.2026

B. இரமேஷ்,
சென்னை–600 091 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14
பெரு நகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–91, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை, பிளாட் எண் 32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. ரமேஷ் என்பவரின் 16.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.07.2025 அன்று பெறப்பட்டு 337/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–91, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை, பிளாட் எண் 32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. ரமேஷ் என்பவர் 16.07.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "நான் மேற்படி முகவரியில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் வசிக்கும் வீடானது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 அலுவலகத்திற்கு எதிரே உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அலுவலகம் அமைந்துள்ள புழுதிவாக்கம் பிரதான சாலையானது மேடவாக்கம் பிரதான சாலையுடன் இணையும் பகுதியில் காணப்படும் மழைநீர் வடிகால் கால்வாய் சரிவர சிமெண்ட் கொண்டு மூடப்படாமல் பெரிய பள்ளத்துடன் காணப்படுகிறது. மழைக்காலங்களில் யாராவது தவறி பள்ளத்தில் விழுந்து உயிரிழக்கும் அபாயம் உள்ளது. இது பற்றி கடந்த 9.6.2025 தேதியில் நம்ம சென்னை ஆப் மூலம் நான் புகார் பதிவு செய்துள்ளேன். புகார் எண் 2025–1140JH ஆகும். இந்த புகாரில் புழுதிவாக்கம் பிரதான சாலையில் மழைநீர் தேங்கா வண்ணம் மழைநீர் வடிகட்டிகள் அமைக்கப்படவில்லை என்பதையும் நான் தெரிவித்துள்ளேன். மேற்படி என் புகார் மீது இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இனி மேற்படி மழைநீர் வடிகால் கால்வாய் பள்ளத்தில் யாராவது தவறி விழுந்து உயிர் இழந்தால் அதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலரும் அவரின் கீழ் பணியாற்றும் 186வது வார்டு உதவி பொறியாளருமே முழு பொறுப்பு.

பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலரும் அவரின் கீழ் பணியாற்றும் 186வது வார்டு உதவி பொறியாளரும் சட்டப்படி தங்களது கடமையை செய்யாமல் தவறியுள்ளனர். இதனால் நான் உட்பட பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் புகார் செய்தால் அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் அலட்சியம் செய்கின்றனர். இதனை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய சென்னை மாநகராட்சி உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் தூங்குகின்றனர்.

எனவே தாங்கள் தயவு செய்து மேற்படி நிகழ்வுகளை கருத்தில் கொண்டு என்னுடைய பெருநகர சென்னை மாநகராட்சி இணையதள புகாரின் மீது நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறிய சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அலுவலர் மற்றும் அவரின் கீழ் பணியாற்றும் 186வது வார்டு உதவி பொறியாளர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் நியாயமெனக் கருதும் இன்ன பிற உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் மாண்பமை உள்ளாட்சி முறைமன்ற நடுவரை நான் நீதியின் பெயரால் பிரார்த்திக்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், மனுதாரர் தன்னுடைய 21.07.2026 நாளிட்ட மின்னஞ்சலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"Due to my high court work, I am unable to attend Hon'ble Ombudsman Appeal petition case No.337/2025 on 7.8.2026. So I request to you please dispose above my case on merits."

5. விசாரணை அழைப்பாண அனுப்பிய பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையர் (முதுநிலை) ஆகியோர் 06.08.2026 நாளிட்ட தங்களது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளனர்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம் பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயானது மேடவாக்கம் பிராதன சாலையில் இணையும் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏதும் ஏற்படாதவாறு மூடப்பட்டுள்ளது மற்றும் இச்சாலையில் தேங்கும் மழைநீர் வடிகால்வாயில் சென்றடைய ஏதுவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று இம்மனுவினை இரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 07.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம் பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயானது மேடவாக்கம் பிராதன சாலையில் இணையும் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏதும் ஏற்படாதவாறு பள்ளம் மூடப்பட்டும், இச்சாலையில் மழைநீர் வடிகால்வாயில் சென்றடைய ஏதுவாக வழிவகை செய்யப்பட்டும், மனுதாரரின் கோரிக்கை முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்ட புகைப்பட நகலினை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்.''

7. மனுதாரரின் மனு, மின்னஞ்சலில் பெறப்பட்ட கடிதம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் செயற்பொறியாளர், உதவிப் ஆணையர் (முதுநிலை) ஆகியோரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி, 14–வது மண்டல அலுவலகம் அமைந்துள்ள புழுதிவாக்கம் பிரதான சாலையானது மேடவாக்கம் பிரதான சாலையுடன் இணையும் பகுதியில் காணப்படும் மழைநீர் வடிகால் கால்வாய் சரிவர சிமெண்ட் கொண்டு மூடப்படாமல் பெரிய பள்ளத்துடன் காணப்படுகிறது என்பதும், மழைக்காலங்களில் யாராவது தவறி பள்ளத்தில் விழுந்து உயிரிழக்கும் அபாயம் உள்ளது என்பதும், இது பற்றி நம்ம சென்னை ஆப் மூலம் பதிவு செய்யப்பட்ட புகாரில் புழுதிவாக்கம் பிரதான சாலையில் மழைநீர் தேங்கா வண்ணம் மழைநீர் வடிகட்டிகள் அமைக்கப்படவில்லை என்பதையும் தெரிவிக்கப்பட்டும், மனுதாரர் புகார் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், இவ்வாறு மனுதாரரால் இணையதள மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புகார் அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி 14–வது மண்டல அலுவலர் மற்றும் அவரின் கீழ் பணியாற்றும் 186வது வார்டு உதவிப்பொறியாளர் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம் பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயானது மேடவாக்கம் பிராதன சாலையில் இணையும் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏதும் ஏற்படாதவாறு பள்ளம் மூடப்பட்டும், இச்சாலையில் மழைநீர் வடிகால்வாயில் சென்றடைய ஏதுவாக வழிவகை செய்யப்பட்டும், மனுதாரரின் கோரிக்கை முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் செயற்பொறியாளர், உதவிப் ஆணையர் (முதுநிலை) ஆகியோரின் அறிக்கை, செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ல் அமைந்துள்ள புழுதிவாக்கம் பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயானது மேடவாக்கம் பிராதன சாலையில் இணையும் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு பள்ளம் மூடப்பட்டு இச்சாலையில் மழைநீர் வடிகால்வாயில் சென்றடைய ஏதுவாக வழிவகை செய்யப்பட்டு மனுதாரரின் கோரிக்கை முழுமையாக

நிறைவேற்றப்பட்டுள்ளது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலம் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட மனுதாரர் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.B. ரமேஷ்,
பிளாட் எண் 32,
ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை,
உள்ளகரம்,
சென்னை–600 091.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 664, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம்,
சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல் :
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/9/26
செயலாளர்.

4/10